தொல்காப்பியம் : மொழியியலின் நுழைவாயில் (தொல்காப்பியம் ஆங்கில மொழிபெயர்ப்புடன்)

Tolkāppiam - The Linguistics Threshold (with Tolkāppiam text in English translation)



மருதூர் அரங்கராசன்




வி.முருகன்

ஆங்கிலப் பேராசிரியர் முதுமுனைவர் வி.முருகன் அவர்களின் இந்தச் சிறந்த ஆய்வுநூலைப் படிக்கிற அரிய வாய்ப்பு அண்மையில் எனக்கு அமைந்தது. அந்நூல் பற்றிய கருத்துகள் சிலவற்றை இங்கே உங்களோடு பகிர்ந்துகொள்ள விழைகிறேன்.

தமிழ்நாட்டின் இரும்புக்காலம் மற்றும் சிந்துசமவெளி நாகரிகத்தை (கி.மு.3345) மேலெல்லையாகவும், கீழடி நகர நாகரிகத்தைக் (கி.மு.800) கீழெல்லையாகவும் கொண்ட இடைப்பட்ட காலத்தில் வாழ்ந்த தமிழ்ச்சமுதாயம் செழுமையான பண்பாட்டையும் பரந்துபட்ட கல்வியறிவையும் பெற்றிருந்தது. இந்தக் கால எல்லைக்குள்தான் தொல்காப்பியம் தோன்றியிருக்க முடியும் என்பதையும், 'பாணினி'யின் (கி.மு.4ஆம் நூற்றாண்டு) 'அஷ்டாத்யாயி' நூலுக்கும், கிரேக்க அறிஞர் 'டயோனிசியஸ் த்ராக்ஸ்'ஸின் (கி.மு.2ஆம் நூற்றாண்டு) 'கிரேக்க இலக்கணக்கலை' (Techne Gramatike) நூலுக்கும் பல நூற்றாண்டுகளுக்கு முன்பாகவே தோன்றிய நூல் தொல்காப்பியம் என்பதையும், சென்ற நூற்றாண்டில் மேனாடுகளில் தோன்றி, கிளைத்து, கற்பனைக்கும் எட்டாத அளவுக்கு அசுர வளர்ச்சி பெற்ற மொழியியலின் பல்வேறு கிளைகளுக்கும் தொல்காப்பியம் எவ்வாறு முன்னோடியாக - முதல்நூலாக விளங்குகிறது என்பதையும், உலகின் முதல் மொழியியல் நூலே தொல்காப்பியந்தான் என்பதையும் தக்க சான்றுகளுடன் இந்த நூலில் நிறுவியுள்ளார் பேராசிரியர் வி.முருகன்.

பேராசிரியர் வி.முருகன் ஒப்பிலக்கியத்தில் முனைவர் (Ph.D.) பட்டத்தையும், பயனாக்க மொழியியலில் முதுமுனைவர் (D.Litt.) பட்டத்தையும் பெற்றவர்.

ஆக்ஸ்ஃபோர்டு ஆங்கிலம் - ஆங்கிலம் - தமிழ் அகராதி, ஆக்ஸ்ஃபோர்டு தமிழ் - தமிழ் - ஆங்கிலம் கையடக்க அகராதி போன்றவற்றை அரும்பாடுபட்டு உருவாக்கிய அகராதியியல் அறிஞர்; தொல்காப்பியம், நற்றிணை, கலித்தொகை, பரிபாடல், திருக்குறள் போன்ற செவ்விலக்கியங்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து உலகெங்கும் கொண்டுசென்ற பெருமைக்குரிய மொழிபெயர்ப்பறிஞர்.



தொல்காப்பியத்தை மொழியியல் கண்ணோட்டத்தோடு அணுகியும் நுணுகியும் ஆய்ந்து, தாம் கண்ட அரிய உண்மைகளை யாரும் மறுக்கவொணா வண்ணம் தக்க அக - புறச்சான்றுகளுடன் இந்த நூல் முழுதும் அள்ளித் தெளித்துச் சென்றுள்ளார். இந்த நூல் கீழ்க்காணும் ஏழு இயல்களைக் கொண்டுள்ளது.

1) தொல்காப்பியம்: ஓர் ஏரண அறிமுகம்

(Tolkāppiam: A Polemical Introduction)

['Polemical' என்பதற்கு 'ஏரணம்' என்பது பொருத்தமான தமிழ்ச் சொல்லா என்பது தெரியவில்லை; 'ஒரு கருத்தைக் கடுமையாக - தீவிரமாக - எதிர்த்து எழுப்பப்படுகிற தர்க்க விவாதம் - கண்டனம்' என்பதையே அது குறிக்கிறது; 'தொல்காப்பியம்: வழக்கு - எதிர்வழக்கு அறிமுகம்', 'தொல்காப்பியம் - அளவையியல் (தர்க்க) அறிமுகம்' என்பனவற்றுள் ஒன்று பொருந்தலாம். சரியான கலைச்சொல் கிடைக்கிற வரை 'ஏரணம்' என்பதையே பயன்படுத்தலாம் என்று கருதுகிறேன்.]

2) தொல்காப்பியத்தில் கோட்பாட்டு மொழியியல் (Tolkāppiam as Theoretical Linguistics)

3) தொல்காப்பியத்தில் பயனாக்க மொழியியல் (Tolkāppiam as Applied Linguistics)

4) தொல்காப்பியத்தில் பண்பாட்டு மொழியியல் (Tolkāppiam as Cultural Linguistics)

5) தொல்காப்பியத்தில் சூழலியல் மொழியியல் (Tolkāppiam as Ecolinguistics)

6) தொல்காப்பியத்தில் இலக்கிய மொழியியல் (Tolkāppiam as Literary Linguistics)

7) தொகுப்புரை (Conclusions)

நூலின் இன்றியமையாப் பகுதிகளைக் கரிக்கோலால் கோடிட்டு வைத்துக்கொள்வது என்ற முடிவோடு இந்த நூலைப் படிக்கத் தொடங்கினேன். இப்போது நூல் முழுதும் கோடுகள் மட்டுமே உள்ளன. அனைத்தையும் இந்த நூலறிமுகத்தில் சொல்ல வாய்ப்பில்லை; சொல்ல முயன்றால், 'விரிப்பின் அகலும், தொகுப்பின் எஞ்சும்'. எனவே, பானைச்சோற்றுக்குப் பதச்சோறாக ஒன்றிரண்டை மட்டும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

இயல் 1: தொல்காப்பியம்: ஓர் ஏரண அறிமுகம்

பிராகிருதம், கிரேக்கம், சம்ஸ்கிருதம் போன்ற செம்மொழிளுக்கான இலக்கண நூல்கள் எல்லாம் இலக்கிய வழக்குக்கான (செய்யுள் வழக்கு) இலக்கணத்தை மட்டுமே கூறிச்செல்கின்றன என்பதையும், மாறாக, தொல்காப்பியம் உலக வழக்கு, செய்யுள் வழக்கு (வழக்காறு, செய்யுளாறு) ஆகிய இரண்டையும் ஏற்றுக்கொண்டு, உரிய அங்கீகாரம் தந்து, இரண்டுக்கும் இலக்கணம் கூறிச்செல்கிறது என்பதையும் அகச்சான்றுகளுடன் நிறுவுகிறார் பேராசிரியர்.

தொல்காப்பியம் காலத்தால் முதன்மையது, தனித்துவமானது, தன்னளவில் முழுமை பெற்றது, செவ்வியல் தன்மை கொண்டது, மொழியின் அடிப்படை இலக்கணத்தைப் பேசுவதோடு தனது எல்லையைச் சுருக்கிக்கொள்ளாமல், மொழியியலைப் பல கோணங்களில் அணுகக்கூடியது, அறிவியல் அணுகுமுறை கொண்டது, மதச்சார்பற்றது - என்பனவற்றையெல்லாம் தக்க சான்றுகளுடன் நிறுவிச்செல்கிறார் பேராசிரியர்.

உலகின் **முதல் இலக்கண / மொழியியல் நூல்** தொல்காப்பியம் என்பதையும், இந்நூல் உலகமொழிகளுக்கான பொதுமையையும் பேசுகிறது என்பதையும் தக்க சான்றுகளுடன் ஆணித்தரமாக நிறுவுவதன் மூலம் இதுவரை நிலவிவந்த கட்டுக்கதைகளின் கட்டுகளையெல்லாம் உடைத்தெறிகிறார் பேராசிரியர்.

இயல் 2: தொல்காப்பியத்தில் கோட்பாட்டு மொழியியல்

மொழியியல் அல்லது மொழியறிவியல் என்பது இருபதாம் நூற்றாண்டில்தான் கல்விசார் துறையாக அறியப்பட்டது; ஆனால், கற்பனைக்கெட்டா அசுர வளர்ச்சி பெற்றது. நிலைமை இவ்வாறு இருக்க, மூவாயிரம் ஆண்டுகளுக்கும் முற்பட்ட தொல்காப்பியம் கோட்பாட்டு மொழியியல், வண்ணனை மொழியியல் ஆகிய இரண்டையும் விரிவாகவும் விளக்கமாகவும் தெளிவாகவும் பேசக்கூடிய நூலாக விளங்குகிறது என்பதைப் பல அகச்சான்றுகளுடன் விளக்குகிறார் பேராசிரியர். பேச்சொலிகளின் ஒலிப்பு மற்றும் உருவாக்கம் பற்றிய தொல்காப்பியரின் கூர்நோக்கும் பதிவுகளும் (பிறப்பியல்) கோட்பாட்டு மொழியியலைப் பேசுமாற்றைப் பேராசிரியர் தெளிவாக விளக்குகிறார்.

எழுத்தமைப்பியல், ஒலியியல், ஒலியனியல், உருபனியல், உருபொலியனியல், தொடரியல், பொருண்மையியல்- ஆகிய இற்றைநாள் கோட்பாட்டு மொழியியல் பிரிவுகளையெல்லாம் தொல்காப்பியர் அன்றே எவ்வாறு அறிவியல் பார்வையோடு நுணுக்கமாகப் பார்த்துள்ளார் என்பதைத் தொடர்புடைய நூற்பாக்களின்வழி விரிவாக விளக்குகிறார் பேராசிரியர்.

சார்லஸ் ஜெ.ஃபில்மோரின் (1968) வேற்றுமைக்கோட்பாட்டை மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தொல்காப்பியர் எவ்வாறு விரிவாகப் பேசியுள்ளார் என்பதையும் கண்டு காட்டுகிறார் பேராசிரியர்.

இயல் 3: தொல்காப்பியத்தில் பயனாக்க மொழியியல்

சென்ற நூற்றாண்டில்தான் 'பயனாக்க மொழியியல்' அறிமுகம் கண்டது. ஆனால் இத்துறை சார்ந்த கருத்துகள் தொல்காப்பியத்தில் மிகவிரிவாகப் பேசப்பட்டுள்ளன என்பதைப் பேராசிரியர் இனிதே விளக்குகிறார். மொழிக்கற்றல், மொழிக்கற்பித்தல், சொல்லாய்வு (Lexicology), அகராதியியல் (Lexicography), மொழிபெயர்ப்புக் கோட்பாடு, மொழிபெயர்ப்பு நடைமுறை / பயன்பாடு - போன்றவற்றைத் தொல்காப்பியம் எவ்வாறு தெளிவாகப் பேசுகிறது என்பதை நூற்பாக்களின் துணைகொண்டு ஐயந்திரிபற விளக்குகிறார் பேராசிரியர்.

இயல் 4: தொல்காப்பியத்தில் பண்பாட்டு மொழியியல்

பண்பாட்டு மொழியியலை அகத்திணையியல், களவியல், கற்பியல், பொருளியல், புறத்திணையியல் - ஆகிய இயல்கள் எவ்வாறு விரிவாகப் பேசுகின்றன என்பதையும், 'அகனைந்திணை சுட்டி ஒருவர் பெயர்கொளப்

பெறாமையும்', 'புறத்திணை மருங்கின் அது பொருந்தும் தன்மையும்' அகத்திற்கும் புறத்திற்கும் இடையேயான நுட்பமான வேறுபாடு என்பதையும் பேராசிரியர் விரிவாகப் பேசுகிறார்.

'கற்பு எனப்படுவது', 'கொடுப்போர் இன்றியும்', 'பொய்யும் வழுவும்' ஆகிய நூற்பாக்களின் மூலம் திருமணத்தின் இன்றியமையாமையைத் தொல்காப்பியர் சுட்டுமாற்றை விளக்குகிறார் பேராசிரியர்.

மனிதமொழியின் கூறுகளை ஆராய்வதோடு நின்றுவிடாமல், பண்பாடு மற்றும் இயற்கையோடு மொழி பின்னிப்பிணைந்து இரண்டறக் கலந்துநிற்பதையும் தொல்காப்பியர் காட்டுகிறார்-என்பதைப் பல நூற்பாக்களின் துணைகொண்டு விளக்குகிறார் பேராசிரியர் வி.முருகன்.

இயல் 5: தொல்காப்பியத்தில் சூழலியல் மொழியியல்

1970களில் அறிமுகமான சூழலியல் மொழியியல் தொல்காப்பியத்தில் எவ்வாறு பேசப்பட்டுள்ளது என்பதையும், மனிதவாழ்விற்கும் இயற்கைக்குமான பிணைப்பைப் பண்டைத்தமிழர்கள் எவ்வாறு வெளிப்படுத்தினர் என்பதையும் தொல்காப்பிய நூற்பாக்களின் துணைகொண்டு விளக்குகிறார் பேராசிரியர்.

தொல்காப்பியப் பொருளதிகாரம் கூறும் சூழல் - அழகியல் கோட்பாடே (Eco-Aesthetic Theory) இவ்வகையில் உலகில் மிகப்பழமையானது என்று கூறும் கே.அப்பைய பணிக்கரின் (மலையாளக்கவிஞர் மற்றும் திறனாய்வாளர்) கருத்துக்குத் தொல்காப்பியத்தின் திணைக்கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டு, உரிய நூற்பாக்களைக் காட்டியும் விளக்கியும் வலு சேர்த்துள்ளார் பேராசிரியர் வி.முருகன்.

இயல் 6: தொல்காப்பியத்தில் இலக்கிய மொழியியல்

மொழியியல் என்பது ஒலியியல், ஒலியனியல், உருபனியல், தொடரியல், சொற்பொருளியல் போன்ற கோட்பாடுகளைப் பேசுவதோடு முடிந்துவிடுவதில்லை. அது இலக்கியச்செயற்பாடுகள் உள்ளிட்ட மொழியின் அனைத்து வகையான பயன்பாடுகளையும் ஆராய்வதையே குறிக்கிறது. ஒரு மொழியின் கவிதைச்செயற்பாடு என்பது அம்மொழியோடு ஒருங்கிணைந்த ஒரு கூறாகும். மொழியியலுக்கும் கவிதைக்குமான உறவை நிலைநாட்ட மேனாடுகள் 80கள் வரை (1987-ரோமன் ஜாகோப்சன்) காத்திருக்க வேண்டியிருந்தது. ஆனால், மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தொல்காப்பியர் செய்யுளியல் மூலம் இலக்கிய மொழியியலை விரிவாகப் பேசியுள்ளார் - என்பனவற்றையெல்லாம் போகிற போக்கில் மேம்போக்காகக் கூறாமல், நூற்பாக்களின் துணைகொண்டு விரிவாக விளக்கிக் காட்டியுள்ளார் பேராசிரியர் வி.முருகன். கவிதை / இலக்கியங்களின் கொள்கைகள், செய்யுள் உறுப்புகள் (34), மொழியியல் நுட்பங்கள், சொற்பொருள் எல்லை, யாப்பு, மெய்ப்பாட்டுக்கொள்கைகள், அணி, நூல் உத்திகள் (32) போன்ற தலைப்புகளில் தொல்காப்பியத்தின் இலக்கிய மொழியியலை மிக விரிவாகவும், மிக ஆழமாகவும் ஆராய்ந்து உலகுக்குக் காட்டியுள்ளார் பேராசிரியர் வி.முருகன்.

இயல் 7: தொகுப்புரை

முந்தைய ஆறு இயல்களிலும் சொல்லப்பட்ட கருத்துகளைத் தொகுத்துக் கூறுவதாகவும், ஆய்வில் கண்ட முடிபுகளை எடுத்துச் சொல்வதாகவும் இந்த இயல் அமைந்து சிறக்கிறது.

நிறைவாக...

(ஒரு சில சுறியது கூறலாகத் தோன்றினாலும், அவற்றை அனுவாதமாகக் கொள்க)

- **கி.மு.3345க்கும் கி.மு.800க்கும் இடைப்பட்ட கால எல்லைக்குள்தான் தொல்காப்பியம் தோன்றியிருக்க வேண்டும்.** இது சம்ஸ்கிருத அஷ்டாத்யாயிக்கும் (கி.மு.4ஆம் நூற்றாண்டு), கிரேக்க இலக்கணக்கலைக்கும் பல நூற்றாண்டுகள் முன்பே தோன்றிய நூல் - என்பதை ஐயந்திரிபற நிறுவுகிறார் பேராசிரியர் வி.முருகன்.
- தங்கள் காலத்தில் வழக்கிலிருந்த (சம்ஸ்கிருத) வேதங்கள், ஹோமரின் இலியட், ஒடிசி போன்றவற்றைப் புரிந்துகொள்ள வைப்பது, பாதுகாப்பது - என்பனவே சம்ஸ்கிருத, கிரேக்க இலக்கணிகளின் நோக்கங்களாக இருந்தன (புளூம்ஃபீல்ட்); அவற்றோடு அந்நூல்களின் எல்லை சுருங்கிவிட்டது. ஆனால், நீண்ட நெடிய பாரம்பரியத்தையும், இடையறவுபடாத தொடர்ச்சியையும் கொண்ட செழுமையான தமிழ் இலக்கண - இலக்கியங்களின் உச்சத்தை ஆராயும் முழுமையான மொழியியல் / இலக்கண நூலாகத் தொல்காப்பியம் பரிணமிக்கிறது என்பதை நூலின் ஒவ்வொரு பக்கத்திலும், பத்தியிலும், வரியிலும், சொல்லிலும், எழுத்திலும் காட்டிச்செல்கிறார் பேராசிரியர் வி.முருகன்.
- மொழியியலின் ஒவ்வொரு பிரிவையும் தனித்தனியே எடுத்துக்கொண்டு, அப்பிரிவு முதன்முதலாக யார் மூலம், எந்த ஆண்டு உலகில் அறிமுகம் ஆகியுள்ளது என்பதையும், அப்பிரிவுகளில் நவீன மொழியியலாளர்களின் கருத்துகள் யாவை என்பதையும் விளக்கும் **பேராசிரியர் வி. முருகன்**, இக்கருத்துகளுக்கெல்லாம் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன் தோன்றிய தொல்காப்பியம் எவ்வாறு முன்னோடியாக விளங்குகிறது என்பதை

அகச்சான்றுகளோடு ஆணித்தரமாக நிறுவிக் செல்கிறார்.

- இந்நூலின் இரண்டாம் பகுதியாக இந்நூலாசிரியரே மொழிபெயர்த்துள்ள தொல்காப்பியத்தின் ஆங்கில மொழிபெயர்ப்பு அமைந்துள்ளது. நேரடியாகவும் எளிமையாகவும் அமைந்து, மூலநூலின் கருத்து சிதையாமல் வெளிப்பட்டுள்ளது. சரியான - நம்பகமான - நடுவுநிலையான - உலக அறிஞர்களின் பயன்பாட்டுக்கு உகந்த சிறந்த மொழிபெயர்ப்பு.
- இந்த நூல் உலகெங்கும் செல்லச்செல்லத் தொல்காப்பியந்தான் உலகின் முதல் மொழியியல் நூல் என்பது உலக மொழியியல் அறிஞர்களுக்கும் புலப்படும்; மொழியியல் ஆய்வு தொல்காப்பியத்திலிருந்து தொடங்கும்.
- ஆய்நெறி கிஞ்சிற்றும் பிறழாமல் உட்குறிப்புகள் (Internal Notes/ Inline Citations), துணைநூற்பட்டி (Bibliography), சொல்லடைவு (Index) ஆகியவற்றுடன் இந்நூல் சிறப்பாக உருவாக்கப்பட்டுள்ளது.
- துணைநூற்பட்டியைக் கண்ணுறும் எவரும் வியப்புறாமல் இரார். தமிழ், ஆங்கில, சம்ஸ்கிருத மொழிகளிலிருந்து 703 நூல்கள் இந்த ஆய்வுக்கு நேரடியாகப் பயன்பட்டுள்ளன என்பதை அறியமுடிகிறது.
- நூல் தயாரிப்பு (Bookmaking) பற்றியும் தவறாமல் குறிப்பிட்டே ஆதல் வேண்டும். எடை அதிகம் கொண்ட - தடிப்பான - வெளிறிய வெள்ளைத் (off-white) தாள்கள்; கண்ணை உறுத்தாத எழுத்துருக்கள் (Reader Friendly Fonts); 7.5" × 9.5" என்னும் பெரிய அளவிலான (B5) நூல்; 428 + 16 பக்கங்கள்; உறுதியான தாள் அட்டை (Soft Cover); தொல்காப்பியரையும் உலகவரைபடத்தையும் கொண்ட பொருத்தமான மேலட்டை - என உலகத்தரத்தில் நூலை வெளிக்கொணர்ந்துள்ள டிஸ்கவரி பதிப்பகத்தாருக்கு நம் வாழ்த்தும் பாராட்டும் நன்றியும் என்றும் உரிய.
- தமிழ், ஆங்கிலம், மொழியியல் பயிலும் மாணவர்களுக்கும், பயிற்றும் ஆசிரியர்களுக்கும், ஆய்வாளர்களுக்கும் இந்த நூல் பேரளவில் பயன் விளைக்கும் ஒன்றாக அமையும் என்பதில் இருவேறு கருத்துகளுக்கு இடமில்லை.
- தமிழ் மட்டுமே அறிந்தவர்களிடத்தும் இந்த நூல் உரிய வகையில் சென்றடைய வேண்டுமானால், இதன் தமிழாக்கம் வெளிவர வேண்டும். தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் புலமை பெற்ற இந்நூலாசிரியரே இதன் தமிழாக்கத்தையும் விரைவில் வெளிக்கொணர்வார் என்று நம்புவோமாக. தொல்காப்பியம் பற்றிய உலக அறிஞர்களின் கருத்துகளையெல்லாம் தொகுத்துத் தனியே ஒரு நூலையும் பேராசிரியர் கொண்டுவரலாம்.
- தமிழ்நாட்டிலுள்ள நூலகங்கள் அனைத்திலும் இந்த நூல் இடம்பெறத் தமிழ்நாடு அரசு ஆவன செய்ய வேண்டும்.
- பேராசிரியரின் ஒட்டுமொத்தத் தமிழ்த்தொண்டு, அகராதியியல் பணி, செவ்விலக்கிய மொழிபெயர்ப்புச்சேவை, குறிப்பாகவும் சிறப்பாகவும் இந்தத் தொல்காப்பிய ஆய்வு - போன்றவற்றைப் போற்றும்வண்ணம் பேராசிரியருக்கு உரிய அங்கீகாரத்தைத் தமிழ்நாடு அரசு வழங்குதல் வேண்டும்.

நூலாசிரியர் தொடர்புக்கு...
பேராசிரியர் வி. முருகன்
+91 99624 77608

நூல் தேவைக்கு...
டிஸ்கவரி பப்ளிஷர்ஸ், சென்னை - 600 078
+91 99404 46650 - +91 87545 07070